RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1510

OPEN ACCESS

# விக்கிரமசோழன் உலாவில் இடம்பெற்றுள்ள உலா இலக்கணக் கூறுகள்

ப. அன்பரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை- 625009, தமிழ்நாடு, இந்தியா

# Analysis of the Grammatical Elements in Vikrama Cholan Ula

**P. Anbarasi [a, *]**

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: anbuphd85@gmail.com

Received: 09-06-2022
Revised: 23-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil literature can be divided chronologically into various categories. Among these, the period of Nayak is called the period of Sitrilakkiyam. There are nine hundred and six types of Sri Lankan literature. This literature reached its peak during the Nayak period. But the origins of Sitrilakkiyam letters are earlier in the history of Tamil literature. Poet Ottakoothar lived in the 12th century AD. This was the end of the Chola Empire. Vikrama Cholan (1118–1135 AD), his son Kulothunga Cholan II (1135–1150 AD), and his son Rajaraja II (1150–1163 AD)—all three have sung the Ottakootha of Moovarula. This study looks at the praises for Vikrama Chola and the grammatical elements mentioned in Patiyal texts.

**Keywords:** Nayak period, Vikrama Cholan Ula, Patiyal Texts, Sitrilakkiyam, Ottakoothar

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களைக் கால வரிசைப்படி பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில் நாயக்கர் காலத்தினை சிற்றிலக்கிய காலம் என்பர். சிறிலக்கிய வகைகளைத் தொன்னூற்றாறு எனக் குறிப்பிடுவர். இச்சிற்றிலக்கியம் உச்சம் பெற்றது நாயக்கர் காலத்தில் ஆகும். ஆனால் சிற்றிலக்கியத்திற்கான தோற்றம் தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்பே இருந்துள்ளன. கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் ஒட்டக்ககூத்தர் ஆவார். இது சோழப்பேரரசின் இறுதிக்காலம் ஆகும். விக்கிரமசோழன் (கி.பி.1118 - 1135), அவன் மகன் இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1135 - 1150), அவன் மகன் இரண்டாம் இராசராசன் (கி.பி.1150 - 1163) ஆகிய மூவரையும் மூவருலா என்னும் நூலின் ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார். கி.பி.12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்த விக்கிரசோழனின் பெருமையைப் பாடும் விக்கிரமசோழன் உலாவில் பாட்டியல் நூல்கள் கூறும் இலக்கணக் கூறுகள் அமைந்துள்ளமையை ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## உலா - இலக்கணம்

பாட்டுடைத் தலைவன் உலா வருவதாகப் பாடப்படும் இலக்கிய வகை ஆதலால் இது 'உலா'எனப்படும். தொல்காப்பியர் இதனை,

"ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப"

என்று குறிப்பிடுகின்றார் (Tamizhannal, 2010). நவநீதப்பாட்டியல்,

"தெருவினிற் பேதை முதலெழு வோர்கள் திறத்துவாக

ஒருவனை யேத்துங் கலிவெண்பா தூதுலா ஒண்டொடியாய்

மருமலர்க் கையிற் குழமகன் மேல் வைத்த மன்னவர்க்குத்

தருகலி வெண்பாக் குழமகனா மென்று சாற்றுகவே"

என்று குறிப்பிடுகின்றது. பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற எழுவகைப் பெண்களும் தெருவில் உலா வரும் தலைவனைக் கண்டு காதல் கொள்வதாகக் கலிவெண்பா என்ற யாப்பினால் பாடுவது உலா என்று இலக்கணம் கூறுகின்றது (Kalyanasundaranar, 2017). இந்த உலா நூல் முன்னெழுநிலை, பின்னெழுநிலை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுப் பாடப்படும் என்பதை,

"பாட்டுடைத் தலைவன் உலாப்புற வியற்கையும்

ஒத்த காமத் திளையாள் வேட்கையுங்

கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்

றிரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே"

என்று பாட்டியல் தெளிவிக்கின்றது (Ramanujayangar, 2019).

## முன்னெழு நிலை

முதலில் பாடப்படும் முன்னெழுநிலையில் பாட்டுடைத் தலைவனின் மரபு, முன்னோர் பெருமை, தலைவன் நீதி வழங்கும் முறைமை, கொடைச் சிறப்பு, நீராடல், அலங்காரம், உலா வருதல் போன்றவை இடம்பெறும்.

## பாட்டுடைத் தலைவன்

முன்னெழு நிலையில் பாட்டுடைத் தலைவனான கடவுளர்கள், மன்னர்கள், சான்றோர்கள் அமைவர் என்பதை,

"குடிநெறி மரபு கொளல் கொடை விடியல்

நன்னீராடல் நல்லணி அணிதல்

ஒன்னக ரெதிர்கொள நன்னெடு வீதியின்

மதகளிறூர்தன் முதனிலை யாகும்"

என்று பன்னிருபாட்டியல் குறிப்பிடுகின்து. விக்கிரமசோழன் உலாவில் சோழர்குலத்தில் தோன்றிய குலோத்துங்கனின் மகனான விக்கிரமசோழன் பாட்டுடைத் தலைவனாகப் பாடப்படுவான் (Ramanujayangar, 2019).

விக்கிரமசோழன் உலகைக் காப்பதற்காகத் தன்னை அரசனாகப் பதவியில் அமர்த்திக் கொண்டான் என்பதை,

"தோன்றியகோன் விக்கிரமசோழன் தொடைத் தும்பை

மூன்றுமுரசுமுகில் முழங்க-தோன்றலைய

மும்மைப் புவனம் புரக்கமுடிகவித்து"

என்ற அடிகள் விவரிக்கின்றன (Rasaram, 2018).

விக்கிரமசோழன் பட்டத்து ராணியுடன் துயில் கொணடான். பின்பு காவிரியில் நீராடினான். சடையில் பிறையைச் சூடி, நஞ்சினை உண்ட சிவபெருமானை வணங்கினான் என்ற பாட்டுடைத் தலைவனின் செயல்களை,

"பொய்யாத பொன்னித் திருமஞ்சனமாடி"

என்ற அடியும் (Rasaram, 2018),

"மறைக் கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மேவப்

பிறைக் கொழுந்தை வைத்த பிரானைக் கறைக் களத்துச்

செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை

மூக்கண் கனியை முடி வணங்கி"

என்ற அடிகளும் புலப்படுத்துகின்றன (Rasaram, 2018).

## ஊர்தி

விக்கிரமசோழன் அயிராபதம் போன்ற பட்டத்து யானையின் மீது ஏறி அமர்ந்தான். அவனது யானையின் மீது வெண்கொற்றக் கொடை இருந்தது. வலம்புரிச் சங்குகள் முழங்கின. முரசுகள் ஒலித்தன. பகைவர்கள் நடுங்கும் வகையில் சேனைகள் உடன் சென்றன. புலிக்கொடிகள் பறந்தன. இவ்வாறு பாட்டுடைத் தலைவன் யானையின் மீதுசென்றதை,

"கருத்தும் அயிராபத நின்றதனை

இருந்தும் பிடிபடியா ஏறித் - திருத்தக்க

கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்திட்டைக்

கற்றைக் கவிரியினம் காலசைப்ப-ஒற்றை

வலம்புரி யூத வளைக்குலம் ஆர்ப்ப

சிலம்பு முரசம் சிலம்ப-புலம்பெயர்ந்து

வாட்படை கொட்ப மறமன் னவர்நடுங்கக்

கோட்புலிக் கொற்றக் கொடியோங்க"

என்ற அடிகள் தெளிவிக்கின்றன (Rasaram, 2018).

## நீதி வழங்கும் முறை

உலாவரும் அரசனது நீதி வழங்கும் செங்கோல் தன்மை உலா இலக்கியத்திற்குரியதாகும். திசைகள் எங்கும் விக்கிரமசோழன் செங்கோல் தன்மையோடு நீதி வழங்கி ஆட்சிசெய்தான் என்பதை,

"செம்மைத் தனிக்கோல் திசைஅளப்ப"

என்ற அடி விவரிக்கின்றது (Rasaram, 2018).

## கலிவெண்பா

கலிவெண்பா என்பது கலிப்பா வகைகளுள் ஒன்று ஆகும். இது கலியோசை தழுவி வரும். ஈற்றடி வெண்பா போன்று முச்சீரடியாக வரும் என்பதை,

"வான்தளைதட்டு

இசை தனதாகியும் வெண்பா வியைந்துமின் பான் மொழியாய்

விசையறு சிந்தடி யாலிறு மாய் விடின் வெண்கலியே" (Thirumalai Muthusamy, 1955)

என்று யாப்பும்

"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி யியலாற்

திரிபின்றி நடப்பது கலிவெண்பாட்டே"

என்று தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றது (Tamizhannal, 2009). விக்கிரமசோழன் உலாவின் செய்யுள்கள் கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ளன.

## முடிவுரை

சங்க, காப்பிய, பக்தி இலக்கியம் போன்றே சிற்றிலக்கியங்களுள் ஒன்றான உலா இலக்கியமும் சமூகத்தில் மேல்நிலையில் உள்ள கடவுள், அரசன், சான்றோர் ஆகிய யாரேனும் ஒருவரைப்பாடுவதாக இருத்தல் வேண்டும் எனப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. அவர்களது உயர்ந்த வாழ்க்கை நிலையான ஆட்சி முறைமை, அரசு வீற்றிருத்தல், துயில் கொள்ளல், நீராடல், வழிபடல் ஆகியவையும் அவர்கள் உலாவரும் ஊர்தி, உலாவரும் அழகு ஆகியவையும் பாடப்படும் என்ற பாட்டியல் நூல்களின் இலக்கியத்திற்கு ஏற்ப கலிவெண்பா யாப்பில் விக்கிரசோழன் உலா அமைந்துள்ளது.

## References

Kalyanasundaranar, S. (2017) Naveenatha PAtiyal, Tamil Ennaiya Kalvi Kazhagam, Chennai, India.

Ramanujayangar, (2019) Panniru Paatiyal, Tamil Ennaiya Kalvi Kazhagam, Chennai, India.

Rasaram, Durai. (2018) Vikramacholan Ula, Mulai Nilaiyam, Chennai, India.

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.

Thirumalai Muthusamy, A. (1955) Yapparungalakarikai, Star Press, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License